தினமணி சென்னை

சனிக்கிழமை, 8 ஆகஸ்ட் 2020

## புதிய கல்விக் கொள்கை 2020

# ஸ்ரீ ராமச்சந்திரா கல்வி நிறுவனத்தில் ஆக.10-இல் இணையவழி கருத்தரங்கம்

சென்னை போரூரில் உள்ள ஸ்ரீ ராமச்சந்திரா உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் வரும் ஆக.10-ஆம் தேதி 'புதிய கல்விக் கொள்கை-2020' என்ற தலைப்பில் வலைதள கருத்தரங்கை அன்று காலை 11.30 முதல் பிற்பகல் 2 மணி வரை நடத்துகிறது. கருத்தரங்கை வேந்தர் வி.ஆர்.வெங்கடாசலம் தொடங்கி வைக்கவுள்ளார். இதில் இந்திய பல்கலைக்கழக சங்கத்தின் பொதுச் செயலர் டாக்டர் பங்கஜ் மித்தல், மணிபால் உயர் கல்வி அகாதெமியின் துணைவேந்தர் லெஃப்டினன்ட் ஜெனரல் டாக்டர் எம்.டி. வெங்கடேஷ், விஐடி துணைவேந்தர் டாக்டர் ஆனந்த் சாமுவேல், மும்பை பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் டாக்டர் விஜய் கோலே, ஸ்ரீ ராமச்சந்திரா பல்கலைக்கழக துணைவேந்தர் டாக்டர் பி.வி.விஜயராகவன், ஆய்வுத்துறைத் தலைவர் டாக்டர் எஸ்.பி.தியாகராஜன், தர மேம்பாட்டு உள் கட்டமைப்பு குழுவின் ஒருங்கிணைப்பாளர் டாக்டர் ஏ.ரவி ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

மாணவர்களும், ஆசிரியர்களும் https:bit.ly/2DgZ3B6 என்ற வலைதளத்தில் பதிவு செய்யலாம் அல்லது ஸ்ரீ ராமச்சந்திரா உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் முகநூல் மற்றும் யூடியூப் மூலமும் இணையலாம் என அந்த கல்வி நிறுவனம் தெரிவித்துள்ளது.